2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) SUBJECT CODE 21 PTM 206

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : ஜீலை - 2022**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**தொல்காப்பியம் - சொல்லதிகாரம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** (K1)

1. பலர் பால் ஈறுகள்_________________

   அ) அர், ஆர் இ) அன், ஆன்

   ஆ) ர், ப,மார் ஈ) அன், ஆர்

2. வண்ணச்சினைச்சொல்_________________

   அ) செங்கால்நாரை இ) பைந்தார்

   ஆ) கொடுங்கோல் கோவலர் ஈ) நீலயானை

3. பெயர் வேற்றுமை எனப்படுவது_________________

   அ) இரண்டாம் வேற்றுமை இ) முதல் வேற்றுமை

   ஆ) ஆறாம் வேற்றுமை ஈ) மூன்றாம் வேற்றுமை

4. தடுமாறு தொழிற்பெயர்_________________

   அ) புலி போற்றிவா இ) புலிகொல் யானை

   ஆ) புலிபோலப் பாய்ந்தான் ஈ) புலிபோற்றிவா

5. இகர ஐகார ஈறுகள்_________________

   அ) இஈஆகும் ஐஆய் ஆகும் இ) அளபெடைமிகும்

   ஆ) ஓவும் உவ்வும் ஈ) ஈறு விளிகொள்ளா

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. சொல் பொருளுணர்த்தும் முறைகள் யாவை?

7. வினைச்சொல்லின் இலக்கணம் உணர்த்துக.

8. ‘கொன்’ என்னும் இடைச்சொல்லின் பொருள்கள் யாவை?

9. மிகுதி செய்யும் பொருளில் அமையும் உரிச்சொற்கள் யாவை?

10. திசைச்சொல்லின் இலக்கணம் யாது?

(CONTD……….2)

**பகுதி – ஆ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) தகுதி, வழக்கு குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) பால் பிரிந்திசையா உயர்திணைச் சொற்கள் யாவை?

12. அ) இரண்டாம் வேற்றுமையினை விளக்குக.

(அல்லது)

ஆ) ஆகுபெயர் பொருளுணர்த்தும் முறைகளை விளக்குக.

13. அ) விளியேற்கும் உயர்திணை உயிரீறுகள் யாவை?

(அல்லது)

ஆ) உயர்திணைப் பெயர்கள் அமையும் முறைகள் யாவை?

14. அ) பன்மையுரைக்குந் தன்மைச் சொற்கள் யாவை?

(அல்லது)

ஆ) இடைச்சொற்களின் பாகுபாட்டினை விவரி.

15. அ) கடி என்னும் உரிச்சொல் பொருளுணர்த்தும் திறத்தினைச் சுட்டுக.

(அல்லது)

ஆ) பண்புத்தொகையினைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி – இ (4x10=40 மதிப்பெண்கள்))**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5)**

16. கிளவியாக்கம் உணர்த்தும் வழு, வழுவமைதி குறித்து விளக்குக.
17. வேற்றுமை மயக்கம் குறித்த தொல்காப்பியக் கோட்பாடுகளை விவரிக்க.
18. விரவுப்பெயர் குறித்த சொல்லிலக்கணக் கோட்பாடுகளை விளக்குக.
19. இடைச்சொற்கள் பொருளுணர்த்தும் முறைகளை ஆராய்க.
20. உரிச்சொல்லின் இலக்கணம் உணர்த்தி, அவை பொருளுணர்த்தும் திறத்தினை ஆராய்க.
21. பொருள்கோள் குறித்த தொல்காப்பியக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துக.

***********************